(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 36.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 யூன் 23 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் —

(i) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தான அறிக்கை; மற்றும்

(ii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது இலங்கை, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழத்தில் மருத்துவ பீடத்தில் கற்கைப் பிரிவுகளை நிறுவுதல் தொடர்பில் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 20 ஆம் திகதிய 2324/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) சட்டவாக்க நிலையியற் குழுவின் தவிசாளர் கௌரவ அஜித் ராஜபக்ஷ அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்)” எனும் சட்டமூலம் பற்றிய சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையையும் அதன் கூட்ட அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவினால் அறிக்கையிடப்பட்டவாறு 2023 யூலை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பரிசீலிக்கப்படவுள்ளது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) வெலிகம, வெலிபிட்டிய, ஹல்லல சந்தி, இல. 09 இல் வதியும் திரு. எச்.எம். பி. பெரேராவினது 2023.04.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா சமர்ப்பித்தார்.

(2) பிடகோட்டே, எபிடமுல்ல வீதி, 4 ஆம் ஒழுங்கை, இல. 28/3 இல் வதியும் திரு. டி.ரீ.ஆர். குணவர்தனவினது 2023.03.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார சமர்ப்பித்தார்.

(3) (i) அமுகொட, திக்ஹேன சந்தி, "சிசிர" எனும் முகவரியில் வதியும் திரு. எஸ்.டி. லீலாரத்னவினது 2023.02.26 ஆம் திகதியப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) காலி, மாஇட்டிபே, முதலாம் ஒழுங்கை, இல. 15/64 இல் வதியும் திரு. சுஜீவ பிரியங்கர சுமனசேகரவினது 2023.04.24 ஆம் திகதியப்பட்ட மனுவையும்

கௌரவ சம்பத் அதுகோரள சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. அனுதாபப் பிரேரணைகள்:** காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய கௌரவ (திருமதி) லரீன் பெரேரா, கௌரவ ரெஜினோல்ட் குரே, காலஞ்சென்ற கௌரவ புத்திக குருகுலரத்ன மற்றும் கௌரவ முத்து சிவலிங்கம் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.03 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ நிமல் பியதிஸ்ஸ தலைமை தாங்குவாராக" என கல்வி கௌரவ ஹெக்டர் அப்புஹாமி முன்மொழிய அதனை கௌரவ ஜே. சீ. அலவலத்துவல வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.54 மணிக்கு கௌரவ நிமல் பியதிஸ்ஸ தலைமை தாங்கினார்.)

"காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய கௌரவ (திருமதி) லரீன் பெரேரா, கௌரவ ரெஜினோல்ட் குரே, காலஞ்சென்ற கௌரவ புத்திக குருகுலரத்ன மற்றும் கௌரவ முத்து சிவலிங்கம் ஆகியோரின் மறைவையொட்டி பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆற்றிய அனுதாபப் பிரேரணைகளை அங்கீகரித்து சபாநாயகருடன் இணைந்துகொண்ட தலைமை தாங்கும் உறுப்பினர் இவ்வுரைகள் அடங்கிய இன்றைய தின பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதிகளை, மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அவர்களின் குடும்பத்தவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குப் பணிப்புரை வழங்கினார்.

**6. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 5.00 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினரால் 2023 யூலை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.